19.10.2022

O.S No. 210/2017

**P.W.1 – E.M. மகேஷ்**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

எனது பெயர் மகேஷ் . நான் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நிருபண வாக்குமூலத்தில் நான்தான் கையெழுத்து போட்டுள்ளேன். இந்த வழக்கை நிறுவனத்தின் பொது மேலாளர்தான் தாக்கல் செய்துள்ளார். வாதி Bharath Heavy Electricals நிறுவனம் சார்பாக நான் சாட்சியம் அளிக்க அனுமதி கொடுத்து இருப்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை . இந்த வழக்கை தாக்கல் செய்த பொது மேலாளர் சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதிகளுக்கு கொடுத்ததாக கூறப்படும் பொருட்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களில் நான் எதுவும் கையெழுத்து செய்யவில்லை. வாதி நிறுவனம் சார்பாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்ய எந்த அருகதையும் எனக்கு இல்லை என்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தகுந்தது அல்ல என்று சொன்னால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd./- K. Babu, 19.10.2022,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.